## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.
## CC. No. 67 /2026

2026-ம் ஆண்டு ஜூன் மாதம் 4-ம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி- (PW-5)**-ன் வாக்குமூலம்** (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி.A.பத்மபிரியா மூன்றாம் நிலை எழுத்தர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சாஜகான் | தொழில் | | சுயதொழில் |
| த/பெ. | : | சையது முகமது | ஊர் | | மேலதிருப்பந்துருத்தி |
| வயது | : | 53/26 | மாவட்டம் | | தஞ்சாவூர் |

**04.06.2026**

**எதிரி நீதிமன்ற காவலில் உள்ளார். எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.**
**வழக்கறிஞர் ஆஜர்**

**முதல் விசாரணை:**

1) நான் திருப்பந்துருத்தியில் வசித்து சுயதொழில் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது. இரண்டாவது கையொப்பம் அய்ப்கான் என்பவருடையது. சுமார் 6 மாதங்களுக்கு முன்பு ஒருநாள் தேதி நினைவில்லை, நடுக்கடையிலுள்ள எனது மளிகை கடையில் காலை சுமார் 11 மணியளவில் இருந்தபோது, திருவையாறு போலிசார் என்னை காவல்நிலையத்திற்கு வரசொன்னார்கள்.

2) எனது கடையிலிருந்து எனது ஊருக்கு சென்றுகொண்டிருந்தபோது காட்டுக்கோட்டை பைபாஸ் அருகே போலிஸ் ரைடு பண்ணிக்கொண்டிருந்தார்கள். காணொளி காட்சிமூலம் ஆஜராகி உள்ள எதிரி அங்கு இருந்தார். அவர்தான் இதற்கு முன்பு சாட்சி சொல்லி சென்ற அ.சா.1ன் வண்டியை திருடினார். அதை நான் நடுக்கடையில் உள்ள கேமராவில் பார்த்தேன். எதிரியை எனக்கு தெரியுமா என்று போலிசார் என்னிடம் கேட்டார்கள், அவர்தான் வண்டியை திருடியவர் என்று நான் சொன்னேன். ஸ்டேசனில் வந்து கையொப்பம் போடசொல்லி சொன்னார்கள். அதன்பிறகு 1 வாரம் கழித்து நான் ஸ்டேசன் சென்று கையொப்பம் செய்தேன். **ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள கையொப்பங்கள் முறையே அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நடுக்கடையில் உள்ள முகமது ரபிக் மற்றும் முகமது ரியாஸ் ஆகியோரை எனக்கு தெரியும். முகமது ரபிக் எனது சகோதரர் , முகமது ரியாஸ் அவரது மகன். நான் சொல்வதுபோல் எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் எனது சகோதரரின் மகன் முகமது ரியாஸ் என்பவருக்கு ஆதரவாக நான் இவ்வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1ன் பெயர் , ஊர் பற்றிய விபரம் எனக்கு தெரியாது.

**<u>மறுவிசாரணை –</u>** <u>இல்லை.</u>

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம் எஸ்.ஆக்னஸ்ஜெபகிருபா எம்.எல்.,
நீதித்துறை நடுவர்,
திருவையாறு.